ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர்	பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி	30 மே 2025

வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2025 ஏப்பிறல்

விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையொன்றிற்கு மத்தியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆகியவற்றிலிருந்தான ஆரோக்கியமான உட்பாய்ச்சல்களால் ஆதரவளிக்கப்பட்டு இலங்கைப் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையானது 2025 ஏப்பிறலில் தாக்குப்பிடிக்கக்கூடியதாகக் காணப்பட்டது.

நடைமுறைக் கணக்கு மீதி



நடைமுறைக் கணக்கானது 2025 சனவரியிலிருந்து தொடர்ச்சியாக மிகைகளைப் பதிவுசெய்தது.

வணிகப்பொருள் வர்த்தகம்

வர்த்தகப் பற்றாக்குறை

2025 ஏப்பிறல்:
ஐ.அ.டொலர் 717 மில்
2024 ஏப்பிறல்:
ஐ.அ.டொலர் 558 மில்

ஏற்றுமதிகள்
ஐ.அ.டொலர் 968 மில்
2025 ஏப்பிறல் 10.4% வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)

இறக்குமதிகள்
ஐ.அ.டொலர் 1,686 மில்
2025 ஏப்பிறல் 17.5% வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)

பணிகள் (தேறிய)

2025 ஏப்பிறல்: ஐ.அ.டொலர் 368 மில்
2024 ஏப்பிறல்: ஐ.அ.டொலர் 301 மில்

சுற்றுலாத்துறை (ஆண்டிற்காண்டு வளர்ச்சி: 20.1%)
போக்குவரத்து (ஆண்டிற்காண்டு வளர்ச்சி: 109.7%)

போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது

சுற்றுலா பயணிகளின் வருகைகள்

174,608
2025 ஏப்பிறலில் 17.3% வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)

148,867
2024 ஏப்பிறலில்

தொழிலாளர் பணவனுப்பல்கள்

ஐ.அ.டொலர் 646 மில்
2025 ஏப்பிறலில் 18.8% வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)

செலாவணி வீதம்

(ரூ/ஐ.அ.டொலர்)

2.3%
ஆண்டு முதல் திகதி தேய்வு
2025 மே இறுதியிலுள்ளவாறு

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் *

ஐ.அ.டொலர் 6.3 பில்
2025 ஏப்பிறல் இறுதியிலுள்ளவாறு

3.9
மாதங்களின் இறக்குமதி உள்ளடக்கம்

**சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது*

அரச பிணையங்கள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைப் பாய்ச்சல்கள்

2025 ஏப்பிறல்

அரச பிணையங்கள் (தேறிய)	கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (தேறிய)**
ஐ.அ.டொலர் **-12 மில்**	ஐ.அ.டொலர் **3 மில்**
உட்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொலர் 21 மில்	உட்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொலர் 13 மில்
வெளிப்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொலர் 34 மில்	வெளிப்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொலர் 10 மில்

*** முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகள் உள்ளடங்கலாக*

வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு

2025 ஏப்பிறல்

- வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை பிரதிபலிக்கும் வகையில், மாதாந்த நடைமுறைக் கணக்கானது 2025 சனவரியிலிருந்து மிகையாகக் காணப்பட்டது.
- வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2024 ஏப்பிறலுடனும் 2025 மாச்சுடனும் ஒப்பிடுகையில் 2025 ஏப்பிறலில் விரிவடைந்தது. இது, வணிகப்பொருள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியை (10.4%, ஆண்டிற்காண்டு) விட, முக்கியமாக மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளினால் (ஐ.அ.டொலர் 134 மில்லியன்) தூண்டப்பட்ட வணிகப்பொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வேகத்திலான (17.5%, ஆண்டிற்காண்டு) வளர்ச்சியின் விளைவாகும்.
- இறக்குமதி விலைகளின் வீழ்ச்சி, ஏற்றுமதி விலைகளின் வீழ்ச்சியை விட அதிகமாகக் காணப்பட்டதன் காரணமாக வர்த்தக மாற்றுவிகிதம் மாத காலப்பகுதியில் மேம்பட்டது.
- சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2024 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 226 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 257 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டன.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் 2024 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 544 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 646 மில்லியனாகக் காணப்பட்டன.
- அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட தேறிய உட்பாய்ச்சலொன்றிலிருந்து மாற்றலடைந்து ஐ.அ.டொலர் 12 மில்லியன் பெறுமதியான சிறிதளவு தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினை பதிவுசெய்தவேளையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளையும் கருத்திற்கொண்டு) மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 3 மில்லியன் பெறுமதியான சிறிதளவு தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் படுகடன் பணிக்கொடுப்பனவிற்கு மத்தியிலும் 2025 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 6.3 பில்லியனாக ஆரோக்கியமான நிலையில் காணப்பட்டன.
- ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் தேய்வு 2024 இறுதியிலிருந்து 2025 மே இறுதியில் 2.3 சதவீதமாகக் காணப்பட்டது.

விபரமான புள்ளிவிபரங்கள் மாதாந்த வெளிநாட்டுத் துறை செய்தித்திரட்டிலும் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தின் வெளிநாட்டுத்துறைப் புள்ளிவிபர இணையப் பக்கங்களிலும் கிடைப்பனவாகக் காணப்படுவதுடன் அவற்றை பின்வரும் இணையத்தள இணைப்புகள் மூலம் அணுக முடியும்:

https://www.cbsl.gov.lk/ta/புள்ளி-விபரங்கள்/பொருளாதார-குறிகாட்டிகள்

https://www.cbsl.gov.lk/ta/புள்ளி-விபரங்கள்/புள்ளிவிபர-அட்டவணைகள்/வெளிநாட்டுத்-துறை

வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

வகை	ஏப் 2024 (ஐ.அ.டொ. மில்)	ஏப் 2025 (ஐ.அ.டொ. மில்)	மாற்றம் (%)	சன-ஏப் 2024 (ஐ.அ.டொ. மில்)	சன-ஏப் 2025 (ஐ.அ.டொ. மில்)	மாற்றம் (%)
நடைமுறைக் கணக்கு மீதி	**75.9**	**178.5**	**135.0**	**803.5**	**1,127.4**	**40.3**
வர்த்தக மீதி	**-557.7**	**-717.5**		**-1,777.1**	**-2,257.1**	
வணிகப்பொருள் ஏற்றுமதிகள்	877.6	968.4	10.4	4,056.1	4,315.8	6.4
வணிகப்பொருள் இறக்குமதிகள்	1,435.2	1,685.9	17.5	5,833.2	6,572.9	12.7
பணிகள் கணக்கு (தேறிய)	**301.4**	**368.2**	**22.1**	**1,456.3**	**1,588.2**	**9.1**
பணிகள் - உட்பாய்ச்சல்கள்	558.4	602.5	7.9	2,419.7	2,637.6	9.0
இதில்,						
சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ)	225.7	256.7	13.7	1,251.6	1,379.0	10.2
கடல் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள்	131.0	199.5	52.2	537.2	688.5	28.2
கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள்	70.8	61.6	-12.9	260.6	263.7	1.2
பணிகள் - வெளிப்பாய்ச்சல்கள்	256.9	234.3	-8.8	963.4	1,049.4	8.9
இதில்,						
வெளிநாட்டுப் பயணம்	56.2	53.1	-5.4	223.3	252.3	13.0
கடல் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள்	71.3	75.7	6.2	257.1	345.0	34.2
முதலாந்தர வருமானக் கணக்கு (தேறிய)	**-200.1**	**-107.1**	**-46.5**	**-912.6**	**-613.2**	**-32.8**
முதலாந்தர வருமானக் கணக்கு - உட்பாய்ச்சல்கள்	42.5	83.0	95.4	157.1	261.3	66.3
முதலாந்தர வருமானக் கணக்கு - வெளிப்பாய்ச்சல்கள்	242.6	190.1	-21.6	1,069.7	874.5	-18.2
இதில்,						
நேரடி முதலீட்டுடன் தொடர்பானவை	44.8	65.5	46.1	238.6	343.2	43.8
முதலீட்டுச் சொத்துப் பட்டியலுடன் தொடர்பானவை	95.6	57.1	-40.3	310.1	210.9	-32.0
ஏனைய முதலீட்டு வட்டி	100.5	64.8	-35.6	514.9	311.0	-39.6
இரண்டாந்தர வருமானக் கணக்கு (தேறிய)	**532.3**	**634.8**	**19.3**	**2,036.8**	**2,409.5**	**18.3**
இதில்,						
தொழிலாளர் பணவனுப்பல் - உட்பாய்ச்சல்கள்	543.8	646.1	18.8	2,079.9	2,460.5	18.3
தனிநபர் பரிமாற்றல்கள் வெளிப்பாய்ச்சல்கள்	12.9	12.1	-6.2	46.1	54.1	17.4
நிதியியல் கணக்கிற்கான முக்கிய பாய்ச்சல்கள்						
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய பாய்ச்சல்கள் (இ)	0.3	2.7	732.5	22.6	-33.3	-247.1
அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய பாய்ச்சல்கள்	-24.2	-12.2	-49.4	-113.0	80.3	-171.1
ஒதுக்குகளில் மாற்றம் (ஈ)	510.8	-203.6	-139.9	1,078.5	205.0	-81.0

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது
(ஆ) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டின் அடிப்படையிலானது
(இ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கின்றது
(ஈ) ஒதுக்குச் சொத்து நிலைமையைப் பாதிக்கின்ற மதிப்பீட்டு மாற்றங்களை உள்ளடக்கின்றது